**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No.34/2020**
**Deposition of witness for prosecution –PW–7**

| | | |
|---|---|---|
| Name | : | முகம்மது பிலால் |
| Father Name | : | முனியாண்டி |
| Village | : | தேவிப்பட்டிணம் |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | கொத்தனார் |
| Religion | : | |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 11th day of August 2025.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து கொத்தனாராக வேலை செய்து வருகிறேன். 5,6 வருடங்களுக்கு முன்பு நான் காவல் நிலையம் சென்றபோது போலீசார் வெள்ளை பேப்பரில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அப்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆகும். வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பில் பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி மேற்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 13.06.2019ம் தேதி பகல் 01.45 மணியைபோல போலீசார் சம்பவ இடமான வட்டகுடி விலக்கு அருகே பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் என் முன்னிலையில் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில்

நானும் மாதவனும்  கையொப்பம் செய்தோம் என்று விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு கு.வி**

இல்லை

**மறு விசாரணை**

இல்லை.